**Tamilmanam International Research Journal of Tamil Studies**

**தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**

https://tamilmanam.in/

*Article Type: Article*

# The morality of Sadhuvan in Manimegalai

**Dr K. Kumarakurubaran** [*],

[*] Assistant Professor, Department of Tamil, Mannar Thirumalai Naicker College, Madurai – 625004, Tamil Nadu, India

[*] Correspondence: gurusaru86@gmail.com; Tel.: +919047342591

**Received**: 22-01-2026; **Revised**: 24-01-2026; **Accepted**: 27-01-2026; **Published**: 01-02-2026

**Abstract:** Morality is a concept created by humans for human welfare. Literature serves as a medium to teach morality. Morality is structured as something that must be followed. Through literature, people can be guided toward collective well-being by embracing moral values. Epics feature various characters, and through their stories, morality is conveyed to the public. In particular, the character of Sadhuvan in Manimegalai is used to illustrate moral ideas that benefit society.

**Keywords:** Morality, Manimegalai, Embracing moral, Sadhuvan, Society, Epics,

References:

- **Bharatiyar, Shuddhananda.** *Shuddhananda Bharatiyar Kavithaigal* [Poems of Shuddhananda Bharati].
- **Bharathidasan.** *Manimegalai Venba*.
- **Chithalai Chathanar.** *Manimegalai*.
- **Kothandam, Ko. Ma.** *Manimegalai Kaappiyathil Aaputhiranum, Saathuvanum* [Aaputhiran and Saathuvan in the Manimegalai Epic].
- **Picchimuthu, Ve.** *Manimegalai Kaattum Makkal Vaazhvu* [Life of People as Shown in Manimegalai].
- **Thiruvalluvar.** *Thirukkural*. Manivasagar Pathippagam, 2014.

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# மணிமேகலையில் சாதுவன் அறநெறி

***முனைவர் க. குமரகுருபரன்,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, பசுமலை,

மதுரை, தமிழ்நாடு, இந்தியா,

**ஆய்வுச் சுருக்கம்**

*அறம் என்பது மனித இனத்திற்கு மனிதனால் உருவாக்கப்பட்டது. அறம் போதிக்கும் ஊடகம் இலக்கியம். அறம் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாக கட்டமைக்கப்படுகிறது. இலக்கியத்தின் வழியே மக்கள் அறத்தினை அடுத்தடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்லமுடியும். காப்பியங்களில் பல்வேறு கதை மாந்தர்கள் இடம் பெற்றுள்ளன. கதை மாந்தர்களின் வழி கதையமைப்பினை நகர்த்தி அறம் என்பதை மக்களுக்கு உணர்த்துகின்றனர். மணிமேகலையில் சாதுவன் என்பவனின் மூலம் சமூகத்திற்கு உணர்த்தும் அறக்கருத்துக்களை விளக்குகின்றது.*

**முன்னுரை**

இலக்கியம் என்பது மனிதனுக்காக, மனித வர்க்கத்தின் நன்மைக்காக படைக்கப்பட்டது. மனிதன் நல்வாழ்க்கை வாழ, மகிழ்வுடன் நிம்மதியாக இருக்க, துன்பம் விலகி, இன்பமாய் இருக்க உதவுவதே நல்ல இலக்கியம். ஓவியக்கலை, சிற்பக்கலை, ஆடல்கலை ஆகிய யாவும் கண்கள் மூலமாக மனதிற்கு உவகையூட்டி மகிழ்வை தருபவை. பாடலாகிய இசைக்கலை காதுகளின் மூலம் மனதை இன்ப வெள்ளத்தில் திளைக்கச் செய்பவை. படைப்பு இலக்கியம் என்பது படிக்கும் போது கேட்கும் போது உள்ளத்தில் தங்கி சிந்திக்கச் செய்து வாழ்வின் முன்னேற்றத்திற்கு ஏணியாக, தோணியாகப் பயன்பட்டு உதவுகின்றது. அரிச்சந்திரன் கதை ஒரு காந்தியடிகளை உருவாக்கியது. அங்கிள்டாம் நாவல், உலக கருப்பு இன மக்களின் விடுதலைக்கு வித்திட்டது. கே.ஏ. அப்பாஸின் 'இருதுளி நீர்' என்ற நாவல் ராஜஸ்தான் பாலைவன மக்களுக்கு தண்ணீர் கொண்டு தரும் கால்வாய் வெட்டித்தர உதவியது.

சோவியத் நாட்டின் ஒரு கவிஞரின் இரண்டு கவிதை வரிகள், கால்வாய் வெட்டி பல கிராம மக்களுக்கு தண்ணீர் கிடைக்க வழிகாட்டியது. "மணிமேகலைக்கு இணையான இலக்கியம் உலக இலக்கியங்களிலேயே இல்லை எனலாம்" என்று குறிப்பிடுகிறார் பெரும்புலவர் ஔவை துரைசாமி பிள்ளை. "மணிமேகலை சமுதாயத் தொண்டைக் கூறும் அமுதக் காப்பியம்" என்றார் அ.கி. பரந்தாமனார். இலக்கியங்களில் கூறப்படும் புதிய செய்திகள் அரிய வரலாறு, உவமை நயங்கள், கவித்துவ வரிகள், ஓசை நயங்கள், இப்படிப் பல்வேறு விதங்களில் படிப்பவர்களை மகிழ்வித்து இன்பமடையச் செய்கின்றன.

நண்பர்களிடையே ஏற்படும் பிணக்குகள், குடும்பச் சிக்கல்கள், ஆள்வோர்க்கு ஏற்படும் இடையூறுகள், மக்கள் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகள், சமூக ஏற்றத்தாழ்வுகள், கல்வி பொருளாதாரம் போன்ற பிரச்சினைகளுக்கு இலக்கியங்களில் தீர்வு சொல்லப்பட்டுள்ளன. நமது பண்டைய இலக்கியங்களில் அறிவியல் கருத்துக்களும் சொல்லப்பட்டுள்ளன. அவற்றைக் கற்ற நாம் ஆய்ந்து செயல்படுத்தும் முறைகளைப் பற்றி சிந்திக்காமல் ஆஹா, ஓஹோ என்று புகழ்ந்து பேசி நடைமுறைப்படுத்தாமல் விட்டு விட்டோம்.

இராமாயண காவியம் சகோதர பாசம், பெற்றோரை மதித்தல், அநீதியை எதிர்த்துப் போரிடுதல் போன்ற ஒருமைப்பாடு, ஆட்சித்திறன் செய்திகளை வழங்கி நமக்கு வழி காட்டுகிறது. *மணிமேகலை காப்பியத்தை*

***"சொல்லின்பமும் பொருளின்பமும்***
***சொட்டும் கலை அமுதம்***
***வெல்லும் கலை இன்பத்துடன் விரவும் கவியின்பம்***
***புல்லும் சுவை நல்கும் அருள்பொலியும் உயிர் அமுதம்***
***நல்கும் கதையமுதாவது மணிமேகலை அமுதம்"*** (*சுத்.பாரதி*)

என்ற கவியோகி சுத்தானந்த பாரதியார் மணிமேகலையின் இலக்கியத்தினை புகழந்து குறிப்பிடுகிறார். மேலும்

***"குன்றத்துக் கொம்புத் தேன் முல்லை வாழைப் பழத்தேன்***
***மன்றத்துக் கொம்புத் தேன் முல்லை வாழைப் பழத்தேன்***
***என்ற முத்தேன் உண்டாலே தேன்!***
***இம்மணிமேகலை ஒருத்தி கண்டாலே தித்திக்கும் தேன்"*** (*பா.தா.மணி.வெண்*)

என்று பாரதிதாசன் மணிமேகலைக் காப்பியத்தின் சிறப்பினை புகழ்ந்து பாடுயுள்ளார். "மக்கள் குலத்தை அல்வழி நீக்கி நல்வழிப் படுத்த எழுந்த ஒரு சீர்திருத்தக் காப்பியம் மணி மேகலை" என்பார் அறிஞர் வ.சுப. மாணிக்கனார்.

மணிமேகலைக் காப்பியம் பற்றிய அறிஞர்களின் கருத்துக்களை தொகுத்தால் அதுவே ஒரு நூலாகிவிடும். மானுட நேயமும் மக்கள் தொண்டும் கொள்கையாகக் கொண்ட சாத்தனார் பற்றியும் அறிஞர்கள் புகழ்ந்துள்ளனர். இயற்கையின் இன்ப வாழ்வை இலக்கிய மாக்கியவர் சாத்தனார் என்பார் திரு.வி.க.

தமிழ் இலக்கிய வரலாற்றில் பெண்மைக்கு முதலிடம் தந்து ஒரு கணிகை குலப்பெண்ணைக் காவிய நாயகியாக்கி, முதல் புரட்சி செய்தவர்தான் சாத்தனார். இனி சாத்தனாரின் இலக்கிய படைப்பின் தன்மையை அறிவோம். பல இலக்கியங்கள் வாழ்க்கைக்கு ஏதேனும் ஒரு வழியில் நலம் பயக்கின்றன. மனித குலத்தை துன்பங்களாலும் தொல்லைகளாலும் ஆட்டிப் படைப்பவை, நோய்கள், தன்னலம், போட்டி பொறாமை இவற்றோடு முக்கியமாகப் பசிப்பிணி. இன்றைய விஞ்ஞான சமத்துவ கால கட்டத்தில் கூட, உலகின் சில நாடுகளில் உணவு இன்றி மக்கள் எலும்பும் தோலுமாக துன்பப் படுவதை செய்திகளில், தொலைக்காட்சிப் படங்களில் பார்க்கிறோம்.

மக்களின் அடிப்படைத் தேவையானது உணவு; துவக்ககாலத்தில் மனித சமுதாயம் கிடைத்த உணவை பங்கிட்டு உண்டது. பின்னர் சுயநல உணர்வு வளர்ந்ததால், வலுமையான மனிதன் தனக்கு என்று சேர்த்து வைக்கத் துவங்கினான். இதனால் ஏற்றத்தாழ்வு பெருகி வறுமைப் பேய் மக்களை ஆட்டிப்படைத்தது.

"மனிதன் பிச்சை எடுத்துத்தான் வாழ வேண்டும் என்றால் இந்த உலகத்தைப் படைத்த இறைவன் கெட்டு ஒழியட்டும்" என்றார் வள்ளுவப் பெருந் தகை. "*தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் இந்த ஜகத்தினை அழித்திடுவேம்"என்று பாரதியார் கூறுகிறார்.* "பசி என்று வந்தால் ஒரு பிடிச்சோறு புசி என்று தந்து பாரப்பா" என்று பாடினார் பாரதிதாசன். பசி என்பது இன்றைய நவீன உலகின் தீர்க்க இயலாத பெரும் பிரச்சினையாக உருவாகிவிட்டது.

இந்த பசிப்பிரச்சினையை தீர்க்க உலக இலக்கியங்கள் பலவும் வழிவகைகளைக் கூறினாலும், சாத்தனார் இயற்றிய மணிமேகலை ஒன்றுதான் முழுக்க முழுக்க பசியற்ற உலகைப் படைக்க வழி காட்டுகிறது. பசியே இல்லா உலகில்தான் மனிதன் மனிதனாக வாழ முடியும் என்று இயம்புகின்றது. சாத்தனாரின் மாகாப்பியம் மனித வாழ்வியலுக்கான அறத்தினை தம் பாத்திரங்களின் வழி விளக்குகின்றார்.*மணிமேகலை சிறந்த சமயக் காப்பியம் என்பது எள்ளலவும் ஐயமில்லை. மணிமேகலை தம் சமயத்தின் வழியாக மக்கள் பின்பற்ற வேண்டிய அறத்தினை வலியுறுத்துகின்றது.*

***அறம்***

அறம் என்றால் நல்வழி, ஒழுங்கு, தர்மம் போன்ற பொருள்களை அகராதிகள் வழங்குகின்றன. தமிழர் சிந்தனைப் புலத்தில் அறம் ஒரு முக்கிய கருத்துரு. மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே அறம். அறம் பன்முகத்தன்மைக் கொண்டது. மனித வாழ்வு பரிணாமத்தின் வழியாக மிலிர்வது. மனித வாழ்வின் ஒட்டுமொத்த மதீப்பீடு அறம்.

“அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்” (குறள் - 35)

என்று வள்ளும் குறிப்பிடுகின்றது.

“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற” (குறள் - 34)

என்று வள்ளும் மனத்தூய்மையே அறம் என்று குறிப்பிடுகின்றது. *மணிமேகலை*

***“அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்***
***மறவாது இதுகேள்! மன்னுயிர்க் கெல்லாம்***
***உண்டியும் உடையும் உறையுளும் இல்லது கண்டதில்”*** (மணி. ஆ.228-230)

*என்ற பாடல் வரிகளில் உலகில் வாழும் உயிர்கள் அனைத்திற்கும் உணவும் உடையும் இருக்க இடமும் தருவது அறம் என்று மணிமேகலை குறிப்பிடுகிறன்றது.*

***சாதுவனின் வரலாறு***

“ஒரு குளத்திற்கு அதனுள் பூத்திருக்கும் தாமரை மலர்கள் அழகு சேர்ப்பன. அவறுள் ஓங்கி வளர்ந்து அழகு சேர்க்கும் ஒரு திருமலர் போன்ற கற்பின் சிறப்பைப் பெற்றவளான ஆதிரை வாழும் வீடு இதுதான்” எனக் கூறி அவளிடம் சென்று முதற் பிச்சை ஏற்றல் தகும் என காயசண்டிகை ஆதிரை சாதுவன் இணையரின் வரலாறு கூறுகிறாள்.

சாதுவன் தீய ஒழுக்கங்கள் பலவற்றின் ஊடாக மனையறம் பேணற்குரிய தகவு அற்றவனாகி, மனைவியைப் பிரிந்து, கணிகை ஒருத்தியுடன் வாழ்ந்து வந்தான். வட்டாடல், சூதாடல் என எல்லாத் தீய ஒழுக்கங்களின் ஊடாகவும் தன் பொருளனைத்தையும் இழந்தான். அவனிடம் பொருள் இருந்தவரை அவனைப் பேணிக் கொண்டாடிய அக் கணிகையும் அவனை ஒன்றும் இல்லாதவன் எனப் பழித்துக் கைவிட்டாள். மீண்டும் செல்வந்தன் ஆகவேண்டும் என்கிற அடங்கா வேட்கையுடன் சாதுவன் மரக்கலம் ஒன்றில் ஏறி வணிகர்களுடன் பொருள் தேடிச் சென்றான். கடலில் பெரும் சீற்றம் ஏற்பட்டு மரக்கலம் உடைகின்றது. சாதுவன் கடல் அழிவில் சிக்கி இறந்துபட்டானோ எனத் துயருற்ற ஆதிரை

தீக்குளிக்க முனைகிறாள். ஆனால் அவளைத் தீச்சுடவில்லை. "தீயும் கொல்லாத் தீவினையாட்டி நான்" என அவள் வருந்த, அவள் கணவன் உயிருடன் இருக்கிறான் எனவும் திரும்பி வருவான் எனவும் அசரீரி ஒலிக்க அவள் பொய்கையிற் புகுந்து நீராடிச் செல்பவைளப் போல் மனத்திற் கலக்கம் ஏதுமில்லாமல் இல்லம் திரும்பிக் கணவனுக்காகக் காத்திருக்கிறாள்.

புயலால் கப்பல் சேத மடைய ஒரு பலகையைப் பிடித்து நீந்தி ஒரு மலைவனத்தீவில் கரை சேர்ந்தான். அந்தத்தீவில் உடை அணியாத நாகரீகம் அறியாத மலை இன மக்கள் மனித மாமிசம் உண்பவர்கள். மதுவும் மங்கையுமே அவர்களது வாழ்வின் முக்கிய அம்சம். கப்பலில் தப்பி தீவை அடைந்தவர்களின் உடைகள் வணிகப் பொருட்களைப் பறித்து அந்த மனிதனை கொன்று உண்பவர்கள். அவர்கள் சாதுவனைப் பிடித்துக் கொண்டார்கள். தங்களின் மொழியில் சாதுவன் பேசியதைக் கண்டு வியப்புற்ற அச்சாரணர் அவனை வணங்கி அவர்களின் குருமகனிடம் அழைத்துச் சென்றனர். காய்ந்த மனித எலும்புகள், கள்ளுப்பானைகள், கவிச்சி நாற்றமடிக்கும் சூழல், புலாலின் வீச்சம் எங்கெங்கும் அடிக்க தன் இருக்கையில் கள்ளருந்தியவாறு கிடக்கிறான் நாகர்தலைவன். அவன் அருகே அவனது துணைவி அமர்ந்திருக்கிறாள். இருவரும் மாபெரும் மாமிச மலை போலக் காட்சி அளிக்கிறார்கள்.

***சாதுவனின் அறநெறி***

குறுமகனிடம் அவர்கள் மொழியில் உரையாடி சாவில் இருந்து தப்பிக்கிறான் சாதுவன். அவனது பேச்சால் கவரப்பட்ட நாகர் தலைவன். "பாடையிற் பிணித்து அவன் பான்மையன் ஆகி" குளிர்ந்த மரநிழலில் அவனருகே சென்றமர்ந்த சாதுவனை, "நீ இங்கு வந்த காரணம் என்ன?" என்று கேட்க சாதுவனும் அவன் நிலையைச் சொன்னான். மிக்க அனுதாபம் கொண்ட அந்தப் பழங்குடித் தலைவன், அருந்த ஒன்றும் இன்றி அலைகடலில் உழன்று வந்துள்ளான். இரக்கத்திற்குரியவனாக உள்ளான். வாருங்கள் மக்களே! அவனுக்குக் கள்ளையும் மங்கையையும் பரிசாகத் தருங்கள் என்றான். சாதுவன் இரண்டையும் மறுத்துரைக்கின்றான். அதனை

***"மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும்***
***கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்***
***பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்***
***உறங்கலம் விழித்தலும் போன்ற துண்மையின்***
***நல்லறஞ் செய்தோர் நல்லுல கடைதலும்***
***அல்லறஞ் செய்தோர் அருநர கடைதலும்***
***உண்டென உணர்தலின் உரவோர் களைநதனர்"*** **(ம.ஆதி. 84-90)**

என்ற பாடல் வரிகளில் நல்லறிவை மயக்கமுறச் செய்கின்ற கள்ளினையும், நிலைபெற்ற உயிர்களைக் கொல்லுதலாகிய செயலினையும், கல்குதலற்ற தெளிந்த அறிவினையுடையோர் விலக்கியுள்ளனர். பிறந்தவர் இறந்து போதலும் இறந்தவர் மீண்டும் விழித்து எழுதலையும் போன்றதேயாகும். நல்ல அறங்களைச் செய்பவர்கள் இன்ப உலகங்களை அடைதலும் தீமையான செயல்களைச் செய்பவர்கள் அரிதான நரகத்தினை அடைதலும் உண்டு என்று உரைக்கின்றான் சாதுவன். இதைக்கேட்டு ஆச்சரியமடையும் நாகர் தலைவன், "மயக்குறு

மங்கை, மயக்கம் தரும் கள், இதைவிட வேறென்ன உலக இன்பம் இருக்கிறது” என வினவுகிறான்.

“இல்லறமே நல்லறம் எனவும் கொல்லாமை பற்றியும்” கூறத்தொடங்குகிறான் சாதுவன். “நல்லறம் செய்வதால் நல்லுலகம் கிட்டும். உயிர்க்கொலை புரிவதால் நரகமே வாய்க்கும். எனவே உணர்வுக் கொலையும் உடற்கொலையும் புரியற்க. நம் உயிரைப் போன்றதே மற்றொரு உயிரும்.” என்கிற சாதுவனைப் பணிகிறான் நாகர் தலைவன். நல்லறம் பற்றி இன்னும் போதிக்குமாறு வேண்டுகிறான்.

சிந்தை மயக்கும் கள்ளை ஒழித்திடுக. அலைகடலில் சிக்கி இங்கே வரும் மக்களைக் கொல்லுதல் நிறுத்திடுக. முதுமையடைந்து இறக்கும் மாக்கள் (விலங்குகள்) தவிர்த்து வேறெந்த உயிரையும் உண்பதற்காகக் கொல்வதைத் தவிர்த்திடுக, மக்களே மக்களைத் தின்னல் மாக்களின் செயல். அதைச்செய்யற்க. மனிதராய் நடத்திடுக” என அறிவுறுத்தினான் சாதுவன். அவனது வேண்டுகோளை ஏற்ற நாகர் தலைவன் அதைத் தம் மக்கள் அனைவரும் பின்பற்றுவதாக உறுதி அளித்து மரக்கலத்தில் மனிதர்கள் கொண்டு வந்த அரும் பொருட்களையும் பெரும் நிதியமும் பரிசாக அளித்து அனுப்பினான். கள்ளுண்ணாமை, கொல்லாமை முதலான அறங்களை வலியுறுத்திச் செயலுக்கேற்ப நமக்கு சுவர்க்கமோ, நரகமோ கிடைக்கும் என்று உணர்த்தும் வகையில் சாதுவன் அறநெறி அமைகின்றது. இவ்வுலகில் வாழ அனைத்து உயிர்களுக்கும் உரிமை உண்டு அவற்றை கொல்வது கூடாது என்பதை உபதேசிக்கும் வகையில் அமைந்துள்ளது.

***சாதுவன் – ஆதிரை***

*உலக இயல்பை அழிக்கும் பசி எனும் மாபெரும் பிணிக்கு போக்கும் வழியை மணிமேகலைக் காப்பியம் கண்டறிந்து. மணிமேகலை அட்சய பாத்திரம் எனும் அற்பு கருவியைக் கொண்டு பசியை போக்கும் அறச்செயலை செய்கிறாள். முதலில் அட்சய பாத்திரம் பொலிவு பெறவேண்டும்.* அந்தப் பாத்திரத்தில் முதன்முதலில் ஒரு கற்புக்கரசியிடம் பிச்சை வாங்கினால் அள்ள அள்ளக் குறையாத உணவு அதில் வரும் என்று அறிகிறார் மணிமேகலை. முதலில் ஆதிரை என்ற கற்பரசியிடம் பிச்சை வாங்குகிறாள். எவ்வளவு சாப்பிட்டாலும் பசியடங்காத ஆனைத் தீ என்ற நோயால் காய சண்டிகை என்ற பெண் துன்புறு கிறாள். அவளுக்கு முதலில் உணவளித்து அவளது நோயைப் போக்கி, சமுதாயத்தை துன்புறுத்தும் பசிப்பிணியையே சாத்தன் காயசண்டிகையாக குறியீடு செய்து உருவகித்துள்ளான். ஆதிரையின் கணவனே சாதுவன்.

*சாதுவன் ஒரு வணிகன். பல்மொழி புலமை பெற்றவனாக திகழ்கின்றான். மொழி அறிவே அவனை நாகர் தீவிலிருந்து காப்பாற்றியது. நாகர்களின் தலைவனை நன்நெறி வழிப்படுத்தும் பல்வேறு உண்ணத மொழிகளைக் கூறுகின்றான்.* உண்மையை உணர்ந்த நாகர் தலைவன், இனி நாங்களும் மது மாமிசங்களை விட்டு விடுவோம். ஒருவனுக்கு ஒருத்தி என்ற நெறியில் வாழ்வோம் என்று கூறி ஏற்கனவே கவிழ்ந்த கப்பல்களால் கிடைத்த பட்டாடைகள், அணி கலன்கள் பொருட்கள் தந்து சாதுவனை அனுப்பி வைக்கிறான். பிறமொழிகளை, அறிவதால் ஏற்படும் நன்மைகளையும் சாத்தனார் இதன் மூலம் விளக்கி அறிவுறுத்துகிறார். பிறமொழிகளின் அறிவு மூலமாக உலகின் வரலாறு, பிற மக்களின் நாகரிக, பண்பாட்டு கலாச்சாரங்களையும்

அறிந்துகொள்ளவும், அதுவே மானிட ஒற்றுமைக்குப் பாலம் அமைத்து உலக சமாதானத்துக்கும் வழிவகுக்கும் என்பதே சாத்தனாரின் கொள்கை.

***சாதுவனின் அறநெறியும் தற்காலமும்***

*சாதுவனின் அறநெறி இக்காலத்திற்கும் ஏற்றதாக அமையுகின்றது. மணிமேகலை காப்பியம் உலக இலக்கியங்களுடன் ஒப்பிடத்தக்கதாக அமைகின்றது. இந்த இலக்கியம் மக்களிடம் அப்படி என்ன? தாக்கத்தினை ஏற்படுத்திவிட்டது. ஒவ்வொரு இலக்கியமும் அம்மொழிசார் மக்களை சமுதாயத்தை ஏதேனும் ஒரு விதத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கும். மணிமேகலை காப்பியத்தில் சாதுவன் மொழி அறிவு இந்திய நாட்டின் 24 வது மாநிலைமாக உருபெற காரமாக அமைந்தது.*

அஸ்ஸாம் மாநிலத்தில் வடகிழக்கு மலை பிரதேசப் பகுதியில் இராஜபாளையத்தை சேர்ந்த கே.ஏ.ஏ. ராஜா அவர்கள் இராணுவப் படைத் தளபதியாக பணியாற்றினார். அந்த மலையின் பல்வேறு பகுதிகளில் மலைவாழ் மக்கள் பலப்பல இனக்குழுக்களாக வாழ்ந்து வந்தனர். ஒரு பகுதியைச் சார்ந்த மனிதன் அடுத்த பகுதியைச் சார்ந்த மனிதனைப் பார்த்து விட்டால் உடனே அம்பு எய்து கொன்றுவிடுவர். அவர்கள் எப்பொழுதும் பகை உணர்வோடு தான் வாழ்ந்து வந்தனர். ராஜா அவர்கள் அங்கே படைத்தளபதியாக பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு ஒரு நாள் அங்கு நடந்த மணிமேகலை மன்ற விழாவுக்கு சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்கள். மணிமேகலை பற்றிய பலரது சொற்பொழிவுகள் வெகு சிறப்பாக நடந்தது. அப்போது சாதுவன் வரலாறு ராஜா மனதில் நீக்க முடியாத ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தியது.

அதன் பிறகு ராஜா அவர்கள் முதலில் அங்கு வாழும் மலைவாழ் மக்களின் மொழியை கற்றுக் கொண்டார். பின் ஒவ்வொரு பகுதி மலைவாழ் மக்கள் குழுவையும் சந்தித்து அவர்கள் மொழியில் அவர்களோடு பேசினார். “நாம் அனைவரும் கடவுளின் குழந்தைகள் ஒவ்வொரு மனிதனும் நமது சகோதரன் தான். யாரும் நமக்கு பகையில்லை; எல்லோரும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்று அனைவரிடமும் கூறி எல்லோரையும் ஒரே இடத்திற்கு அழைத்து அவர்களுக்குள் உறவை உண்டாக்கி விருந்து வைத்து பேசினார்கள். அங்கு மலைவாழ் பிரிவு மக்கள் பகைகளைந்து ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள். இந்த அற்பு நிகழ்வு இந்திய நாட்டின் பிரதமர் இந்திரா அம்மையார் அறிந்து, அவரை அழைத்து பாராட்டி “அந்த மக்களுக்கு மேலும் என்ன செய்யலாம்” என்று கேட்டார்கள்.

அந்த மலைப் பகுதியை தனி மாநிலம் ஆக்க வேண்டும். அங்கே நிறையப் பள்ளிகள் ஏற்படுத்த வேண்டும் என்றார். “அப்படியே செய்யலாம். அந்த மாநிலத்திற்கு நீங்கள் ஆளுநர் ஆக பணிசெய்ய வேண்டும். மாநிலத்திற்கு என்ன பெயர் வைக்கலாம் என்று கூறுங்கள்” என்றார். அதற்கு ராஜா “இந்தியாவிலேயே சூரியன் முதலில் அங்குதான் உதிக்கிறான். அதனால் அதற்கு ‘அருணாசலப் பிரதேசம்’ என்று பெயர் வைக்கலாம்” என்றார். அதே பெயரில் புதிய மாநிலம் உருவாகி ராஜா அவர்களே ஆளுனராக இருந்து அந்த மக்களுக்கு எவ்வளவோ நற்பணிகளைச் செய்தார்கள். மணிமேகலை காப்பியத்தில் அமையும் கிளைக்கதையின் சிறு கதாப்பாத்திரம் சாதுவன். அவனது மொழி அறிவுதான் இம்மாபெரும் நற்செயலுக்கு உதவியது.

**முடிவுரை**

மணிமேகலைக் காப்பியத்தின் கதை அமைப்பிற்கு கூடுதல் அழுத்ததிற்கு துணைச் சேர்க்கப்பட்ட கிளைக்கதையின் ஊடாக பௌத்த சிந்தாந்த சிந்தனைகளை தூவுகிறார் சாத்தனார். பௌத்தத்திற்கு மிக இறுக்கமான அறக் கோட்பாடுகள் இருந்தன. அவற்றில் மக்கள் எல்லோருக்கும் பொதுவானதாக பின்பற்ற கூடிய எளிய அறக் கோட்பாடுகளும் முன்மொழியப்பட்டன. சமணத்தைப் போன்று மிக கடுத்தனமாக பின்பற்ற வேண்டியவை என்று வற்புறுத்துத்துவதில்லை. மக்களின் வாழ்க்கை முறைகளுடன் இணைந்து தகவமைக்கப்பட்டன. இங்கு சுட்டப்படும் உயிர்க் கொலை, மது, மாமிசம் பாலியல் பிறழ்வுகள் ஆகிய நான்கையும் கைவிடச் சொல்லித் தன் அறவுரையைத் தொடர்கிறான் சாதுவன். பெண்டிரை விடுதல் என்பது முற்றிலும் பாலியல் வேட்கையைக் கைவிடல் என்பதல்ல. இப்படியாக இளம் பெண்களைப் பரிசளித்தல், தாசிகள் என்றொரு பிரிவினை உருவாக்கல் முதலானவற்றைக் கைவிடுதலே பெண்டிரைக் கைவிடல் என்பதன் பொருளாகிறது. முறையான கற்பு அறம் பேணும் முறைமையைக் குறிப்பிடுகிறான்

**துணைநூற்பட்டியல்**


1. *சுத்தாநந்த பாரதியார் - சுத்தாநந்த பாரதியார் கவிதைகள்*
2. *பாரதிதாசன் – மணிமேகலை வெண்பா*
3. *சீத்தலைச் சாத்தனார் – மணிமேகலை*
4. *வே.பிச்சைமுத்து – மணிமேகலை காட்டும் மக்கள் வாழ்வு*
5. *கொ.மா. கோதண்டம் – மணிமேகலைக் காப்பியத்தில் ஆபுத்திரனும், சாதுவனும்*
6. *திருவள்ளுவர் – திருக்குறள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை,* 2014.

Web Resources

- "Manimegalai." Project Madurai, www.projectmadurai.org/pm_etexts/pdf/pm0878.pdf.
- "Manimegalai Course Materials." Tamil Virtual University, www.tamilvu.org/courses/degree/c031/c0312/html/c03121l3.htm.
- Aravazhi Tamil Blog, 2014, aravazhitamil.blogspot.com/2014/08/blog-post.html.
- Keetru, 2015, keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-mar-2015/28311-2015-04-18-12-30-23.